**TNTP130008082026**

Presented on : 26-03-2026
Registered on : 11-05-2026
Decided on : 09-06-2026
Duration : 0 years, 2 months, 14 days

<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், துறையூர்</u>

<u>முன்னிலை</u> : திரு.ரா.சுரேஷ்குமார் B.A., L.L.B (Hons)., L.L.M.,
நீதித்துறை நடுவர், முசிறி
நீதித்துறை நடுவர் (முழு கூடுதல் பொறுப்பு),
துறையூர்.

2026 ம் வருடம் ஜுன் மாதம் 09 ம் தேதி செவ்வாய்கிழமை

**<u>Crl.MP.No. 458/2026</u>**

.....

ஹரிஹரன்,
த/பெ.ராமராஜ். ... மனுதாரர்/வாகன உரிமையாளர்

/Vs/

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
உப்புலியபுரம் காவல் நிலையம்,
குற்ற எண்.571/2025.
U/s.303(2) BNS. ...எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது இறுதியாக 09.06.2026 ல் விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. விக்னேஷ், அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளையும், வழக்கு சங்கதிகளையும் பரிசீலிக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

மனுதாரர் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் Crlmp.No.735/2025 ன் உத்தரவின் படி TN 48 BU 7270 என்ற பதிவெண் கொண்ட YAMAH MT 15 வாகனத்தின் அசல் பதிவு சான்றிதழை ஒப்படைத்துள்ளார். மேலும் வாகனத்திற்கு காப்பீடு புதுப்பிக்க

SURESHKUMAR R
Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.06.09 19:16:53 +0530

தேவைப்படுகிறது என்று மனுதாரர் மேற்படி அசல் பதிவு சான்றிதழை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்கக்கோரி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**2.** அரசு தரப்பில் மனுதாரர் மற்றும் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்றும், மேற்கண்ட வாகனத்தின் அசல் பதிவுச்சான்றிதழை மனுதாரர்/வாகன உரிமையாளர் வசம் ஒப்படைத்தால் வாகனத்தை விற்றுவிடக்கூடும் என்பதாலும், நீதிமன்ற விசாரணையின் போது வாகனத்தின் அசல் பதிவுச்சான்றிதழை ஒப்படைக்க மாட்டார் என்றும், அதனால் விசாரணை பாதிக்கப்படும் என்றும், எனவே, மனுதாரருக்கு இடைக்காலமாக அசல் பதிவுச்சான்றிதழை வழங்கக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3. <u>தீர்வு</u> :**

மனு அனுமதிக்கத்தக்கதா?

**4.** இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் இந்த வழக்கில் வாகன உரிமையாளர் என்றும், வாகனத்தில் பதிவு சான்றிதழ் இல்லாமல் எந்த வேலையும் செய்ய முடியவில்லை என்றும், அசல் பதிவு சான்றிதழை நீதிமன்றம் கேட்கும்போது ஒப்படைத்துவிடுவதாகவும், வாகனத்தை இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்பதையும், மேலும் இந்த வழக்கின் சூழ்நிலையை கருதி கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

**5. <u>நிபந்தனை</u> :**

TN 48 BU 7270 என்ற பதிவெண் கொண்ட YAMAH MT 15 என்ற இருசக்கர வாகனத்தின் அசல் பதிவு சான்றிதழை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்கவும், அசல் பதிவு சான்றிதழை 30 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும்.

இந்த உத்தரவு முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.06.09 19:17:02 +0530

பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஜுன் மாதம் 09-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.06.09 19:17:09 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
துறையூர்.